**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

O.S 326/2022

**.வா.சா.1 செல்வி**

| | | |
|---|---|---|
| Name | : | செல்வி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 08.06.2026 |

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்**

**நான் இந்த வழக்கில் வாதி. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.**

**1. 08.07.2015 ம் தேதியிட்ட என்னுடைய கிரைய ஆவணம் பதிவு நகல் வா.சா.ஆ 1**

**2. 26.5.2022 ம் தேதியிட்ட வழக்கு சொத்திற்குரிய கணிணி பட்டா கணிணி வழி பெறப்பட்டது வா.சாஆ 2**

**3. மேற்படி பட்டா எண்ணில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது எண்ணம் 1 அசல் வா.சா.ஆ 3**

**4. தபசில் சொத்திற்குரிய புலப்படம் (கணிணி வழி பெறப்பட்டது வா.சா.ஆ 4**

**( வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ 3 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

**வழக்குபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

**நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். திருவு கரையாளர் குமாரர் ராமச்சந்திரனுக்கு வழக்கு சொத்து உரிமையானது என்று நிரூபிக்க**

ஆவணமோ, பட்டாவோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ராமசந்திரன் பெயரில் உள்ள பட்டாவை நான் பார்த்துண்டா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்படவில்லை சான்று நகல் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த ராமச்சந்திரனின் நிரந்தர ஊர் குலசேகரபட்டி என்றால் சரிதான். தாவா சொத்து கடையநல்லூர் தாலுகா, புன்னையாபுரம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் இருப்பது சுரண்டை தென்காசி தாலுகா என்றால் சரிதான். எனக்கு கிரையம் செய்து கொடுத்த ராமர் இருக்கும் ஊர் தான் குலசேகரப்பட்டி என்றால் சரிதான். குலசேகரப்பட்டிக்கும், புன்னையாபுரத்திற்கும் இடையே 45 கிமீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த ராமருக்கு நிரந்தரமான சொந்த ஊர் குலசேகரப்பட்டி என்றால் சரிதான். நான் இந்த வழக்கை 3.6.2022 ம் தேதி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த ராமர் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். ராமரின் அப்பா பெயர் திருவு கோனார் என்றால் சரிதான். மேற்படி ராமருக்கு பாப்பா என்ற மனைவியும், வெங்கடேஷ், மூர்த்தி என்ற மகன்கள் உள்ளனர் என்றால் சரிதான். நான் உரிமையில்லாத நபரிடம் இருந்து கிரையம் பெற்றதாக பிரதிவாதி முத்துப்பாண்டி தென்காசி மாவட்ட பதிவாளரிடம் மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய கோரி மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நான் ஆஜரானேன் என்றால் சரிதான். மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் என்னை ஆஜராக நோட்டீஸ் எனக்கு கிடைக்கபெற்றது என்றும், சாட்சி வசம் நோட்டீஸ் நகல் காட்டப்படுகிறது. சாட்சி சரி தான் என ஒப்புக்கொள்வதால் அந்த ஆவணம் பி.வா.சா.ஆ 1 ஆககுறியீடு செய்யப்படுகிறது. மாவட்ட பதிவாளர் விசாரணையில் நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த விசாரணையில் ராமர் மனைவி பாப்பா, ராமர் அப்பா

திருவு கோனார், ராமர் மகன்கள் வெங்கடேஷ், மூர்த்தி ஆகியோர்கள் ஆஜராகி வாக்குமூலங்கள் கொடுத்தனர் என்றால் சரிதான். விசாரணையின் அடிப்படையில் மாவட்ட பதிவாளர் நான் எழுதி வாங்கிய கிரையபத்திரங்கள் இரண்டு, மற்றும் ராஜா என்பவருக்கு நான் எழுதி கொடுத்த அடமான பத்திரம் ஒன்று ஆகியவற்றை ரத்து செய்து உத்தரவிட்டார் என்றால் சரிதான். சாட்சி வசம் உத்தரவு நகல் காட்டப்படுகிறது. சாட்சி பார்த்து ஒப்புக்கொள்வதால் அந்த உத்தரவு நகல் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது விற்பனையாளர் பெயர் ஒற்றுமை, தகப்பனார் பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி நான் மோசடியாக கிரைய ஆவணங்கள் எழுதி வா்ங்கியுள்ளேன் என்று இந்த பிரதிவாதி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர் வசம் புகார் மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னை காவல்நிலையத்தில் அழைத்து விசாரணை செய்தனர் என்றால் சரிதான். விசாரணையில் நீதிமன்றத்தை அணுகி தீர்வு காண அறிவுறுத்தினர். வா.சா.ஆ 1ல் திருவு கரையாளர் குமாரர் ராமச்சந்திர கரையாளர் என்று உள்ளது என்றால் சரிதான். மாவட்ட பதிவாளர் முன்பு ராமரின் தந்தை திருவு கோனார், ராமர் மனைவி பாப்பா, அவரது மகன்கள் வெங்கடேஷ், மூர்த்தி ஆகியோர்கள் ஆஜராகி தாவா சொத்திற்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், ராமச்சந்திரன் என்ற பெயரை மோசடியாக பயன்படுத்தி ராமர் என்பவர் கிரையம் மோசடியாக கிரையம் கொடுத்துள்ளார் என்று வாக்குமூலம் அளித்துள்ளனர் என்றால் சரிதான். எனது கிரையதாரர் ராமரின் இறப்பு சான்று இது தான் என்று சாட்சி வசம் காட்டப்படுகிறது. சாட்சி சரி தான் என ஒப்புக்கொள்வதால் அந்த ஆவணம் பி.வா.சா.ஆ 3 ஆககுறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ 3 இறப்புசான்றிதழில் திருவு கோனார் குமாரர் ராமர் என்று தான் உள்ளது. ராமச்சந்திரன் என்று இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள வாக்காளர் அடையாள அட்டையில் திருவு

கோனார் குமாரர் ராமர் என்று தான் உள்ளது, ராமச்சந்திரன் என்று இல்லை என்றால் சரிதான். மோசடியாக ஆவணம் ஏற்படுத்தி கொள்வதற்காக ராமருக்கு ராமசந்திரன் என்ற மற்றொரு பெயர் உள்ளது என கிராம நிர்வாக அலுவலரிடம் பொய்யாக சான்று பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. ராமர் என்ற ராமச்சந்திரன் என்று தான் எனக்கு சொன்னார்கள். வா.சா.ஆ1ல் இணைக்கப்பட்டுள்ள கிராம நிர்வாக அலுவலர் சான்று தான் ராமருக்கு ராமச்சந்திரன் என்ற மற்றொரு பெயர் உண்டு என்பதை நிரூபிக்க ஆதாரம் எதுவும் நான் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ1 ஆவணம் உரிமை இல்லாத நபர் மூலமாக ஆள்மாறாட்டம் செய்து மோசடியாக ஏற்படுத்தியதால் வா.சா.ஆ1 மூலமாக எனக்கு எந்த உரிமையும் கிடைக்கதகுந்தது அல்ல என்றால் சரியல்ல. தாவா சர்வே எண் தவிர மற்றொரு சர்வே எண். 267/1லும் சொத்து தனியாக வேறு கிரைய ஆவணம் மூலம் ராமர் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றபிறகு ராஜா என்பவருக்கு அடமானம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ராஜா என்பவரை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் அழைத்து விசாரித்தனர் என்றால் சரிதான். நான் வாங்கிய கிரைய ஆவணங்கள் மற்றும் ராஜாவிற்கு எழுதி கொடுத்த அடமான பத்திரத்தை ரத்து செய்து மாவட்ட பதிவாளர் உத்தர பிறப்பித்துள்ளதால் இந்த வழக்கை எதிர்வாதம் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கிணறு, மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணறு, மின் இணைப்பு குறித்து வா.சா.ஆ1 கிரைய ஆவணத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியது 8.7.2015 என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த திருவு கோனார் குமாரர் ராமர் இறந்தது 25.06.2017 என்றால் சரிதான். எனது கிரைய பத்திரம் தேதியில் இருந்து ராமர் இறக்கும் வரை இடைப்பட்ட 2 ஆண்டு காலத்தில் கிணறு, மற்றும் மின் இணைப்பை சேர்த்து ஆவணத்தை சீர் திருத்தம் செய்ய நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

கிரைய ஆவணத்தில் கிணறு மற்றும் மின் இணைப்பு காட்டப்பட வேண்டும் என்ற விபரம் கிரையம் பெற்றவுடன் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா இடத்தில் எலுமிச்சை, புளி, பலா மரங்கள் உள்ளது என்றால் சரிதான். எலுமிச்சை மரம் எத்தனை உள்ளது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மோசடியான ஆவணமான வா.சா.ஆ 1 கொண்டு வா.சா.ஆ 2 பட்டாவை பெற்றிருப்பதால் வா.சா.ஆ 2 செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 பட்டா பெறும் முன்பு பிரதிவாதி விசாரிக்கப்படவில்லை, பிரதிவாதிக்கு பட்டா வழங்கப்பட்டது தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் 30.5.2022 ம் தேதி நான் மாவட்ட பதிவாளர் அலுவலகம் முன்பு நான் ஆஜராக வேண்டும் என அறிவிப்பு பி.வா.சா.ஆ 1 வந்தது என்றால் சரிதான். 30.5.2022 ம் அறிவிப்பு சம்பந்தமான விசாரணையை நீர்த்து போக செய்வதற்காக தான் 3.6.2022 ம் தேதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் எந்த காலுத்திலும் அனுபவிக்கவில்லை என்றும், அதனால் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கதகுந்தது அல்ல என்றால்சரியல்ல. பிரதிவாதியின் அப்பாவை பெற்ற தாத்தா பெயர் திருவு கரையாளர் என்றால் சரிதான். பிரதிவாதியின் தாத்தா பெயர் திருவு கரையாளர் என்பதையும், பிரதிவாதியின் தந்தை பெயர் ராமச்சந்திரன் என்பதையும் பயன்படுத்தி நான் உரிமையில்லாத நபர்களிடம் இருந்து மோசடியாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும் அவரது சகோதரருக்கும் பிரதிவாதியின் தாத்தா திருவு கோனார் மனைவி சிவஞானத்தம்மாள் மூலம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் 1956 ம் ஆண்டு கிடைக்க பெற்றுள்ளது என்றால் சரிதான். திருவு கரையாளர் குமாரர் ராமச்சந்திர கரையாளர் என்பவரது பெயரில் தான் தாவா சொத்திற்கு 1860 என்ற நம்பரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தை ராமச்சந்திர கரையாளர் முத்துகிருஷ்ணாபுரத்தில் உள்ள கூட்டுறவு வங்கியில் 1976 ம் ஆண்டு ஈடு செய்து கடன் பெற்று திரும்ப செலுத்தியுள்ளார் என்பது எனக்கு

தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதியின் தகப்பனார் ராமச்சந்திரன் 2004 ம் ஆண்டு இறந்து போனார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராமசந்திர கரையாளர் இறந்தபிறகு பிரதிவாதி மற்றும் அவரது சகோதர, சகோதரிகளுக்கு கிடைக்க பெற்று அவர்களுக்குள் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டு தாவா சொத்து பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் முருகேசனுக்கு கிடைக்க பெற்றது என்றால் சரிதான். உரிமையில்லாத நபர்களிடம் இருந்து பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி நான் மோசடியாக கிரையம் பெற்றுள்ளதால் வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(Sd)K.சுதா ராணி,
கூடுதல் சார் நீதிபதி,
தென்காசி.